வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,378,14,13,000/–, மூலதனக் கணக்கில் ரூ.206,06,54,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–7–2019), புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

11. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

12. பள்ளிக் கல்வித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2019 (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

13. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

14. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

15. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019–2020. (தமிழ்)

16. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019–2020. (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS